ரூ. 15 என்றும், சமதரைப்பகுதியாக இருந்தால் ரூ. 12 என்றும் கொடுக்கப்படுவதாகக் கூறினர்கள். இப்போதுள்ள வாழ்க்கைச் செலவுப் புள்ளி கூடியிருப்பதால் இதைச் சிறிது கூடுதலாகக் கொடுப்பதற்கு அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : சென்ற ஆட்சிக் காலம் வரை 10 ரூபாய் என்றுதான் கொடுக்கப்பட்டு வந்தது. புது ஆட்சி ஏற்பட்ட பின்னர் தான் ரூ. 12 என்று, பல லட்சக்கணக்கான ரூபாய் அதிகமானுலும் பரவாயில்லை என்று, உயர்த்தப்பட்டிருக் கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. விஞயகம் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அனுதைக் குழந்தைகள் எல்லாம் கடவுளின் குழந்தைகள் என்று சொல்லுகிருர்கள். அப்படியென்ருல் கடவுள் பெற்றுப் போட்டாரா அல்லது அவர்களுக்கு தாய் தகப்பன் இந்த உலகத்தில் இல்லையா ?

மாண்புமிகு திரு கா. வேழவேந்தன் : அனுதைக் குழந்தைகள் அப்படித்தான் நினைத்துக்கொண்டிருக்கின்றன.

திரு. எஸ். ஆறுமுகம் : 355 அனுதை இல்லங்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினர்கள். இவற்றிற்கு நமது தமிழக அரசாங்கம் எவ்வளவு உதவித்தொகை அளித்து வருகிறது ? அனுதைக் குழந்தைகள் தமிழ்நாட்டில் அதிகமாக இருப்பதாக இந்தப் பட்டியலிலிருந்து தெரிய வருகிறது. இதற்கெல்லாம் காரணம் ஊருக்கு மத்தியில் விநாயகர், பிள்ளையாரை வைத்திருப்ப தால் அதைச் சுற்றிச் சுற்றி வந்துதான் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த விஞ.

Union for employees of North Arcot District Co-operative Supply and Marketing Society.

* 731 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Labour be pleased to state whether there are two employees' unions for the staff of the North Arcot District Co-operative Supply and Marketing Society Limited, Vellore ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : ஆம்.

திரு கே. விஞயகம் : இந்த நார்த் ஆர்க்காடு டிஸ்ட்ரிக்ட் கோவாப்பரேட்டிவ் சப்ளை அண்ட் மார்க்கெட்டிங் சொஸைட்டியில் மொத்தத்தில் எவ்வளவு சிப்பந்திகள் எவ்வளவு வேலையாட்கள் இருக்கிருர்கள் ? அவர்களுக்குள்ளே ஏற்பட்ட தகராரின் விளைவாக இரண்டு யூனியன்கள், இரண்டு அரசியல் கட்சிகள் உள்ளே புகுந்து இருப்பதற்கு யார் காரணம் ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : மொத்தம் எவ்வளவு சிப்பந்திகள் இருக்கிருர்கள் என்பதற்கு தனிக் கேள்விபோட வேண்டும். மூலக்கேள்வி, " வேலூரிலுள்ள வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு வழங்கல்-விற்பனைச் சங்கப் பணியாளர்களுக்கென இரண்டு தொழிலாளர் சங்கங்கள் உள்ளனவா ? " என்பது. வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு வினியோக விற்பனை தொழிலாளர்கள் சங்கம், வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு வினியோக விற்பனை, மேலும், கற்பகம் கூட்டுறவு பேரங்காடி தொழிலாளர் சங்கம் . 1926-ம் ஆண்டு தொழிற்சங்க சட்டப் பிரிவு 4, உட்பிரிவு 1-ன் படி 7 தொழி லாளர்களுக்குக் குறையாமல் சேர்ந்து சங்கப் பதிவுக்காக மனுச் செய்யலாம் என்றிருக்கிறது. இரண்டு தொழிற் சங்கங்கள் இருக்கின் றன. உறுப்பினர் அவர்கள் ஒரு வழக்கறிஞர். அவர்களுக்குத் தெரியும். இந்திய அரசியல் சட்டப்படி அதைக் கட்டுப்படுத்த முடியாது.